திண்டுக்கல் மாவட்டம்

8 - ஆம் வகுப்பு இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

காலம் : 1.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள் : 50

I **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 X 1 = 5

1. காட்டிலிருந்து வந்த .................. கரும்பைத் தின்றன.

அ) முகில்கள் ஆ) முழவுகள் இ) வேழங்கள் ஈ) வேய்கள்

2. மறைபொருளைக் காத்தல் ............. எனப்படும்.

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

3. ஆன்பொருநை என்று அழைக்கப்படுவது.

அ) காவிரி ஆ) பவானி இ) நொய்யல் ஈ) அமராவதி

4. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு

அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி

5. இதம் + தரும் என்னும் சொல்லைச் சேர்த்தெழுதக் கிடைப்பது.

அ) இதந்தரும் ஆ) இதம் தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

II **கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

6. தமிழ்நாட்டின் மாநில மரம் ..................... .

7. அரசரை அவரது .............. காப்பாற்றும்.

8. மதுரை .................... நகரம் என்று அழைக்கப்படுகிறது.

9. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் .................. .

10. செம்மரம் என்னும் சொல் .............. தொகை.

III **பொருத்துக.** 5 X 1 = 5

11. பெயரெச்சத் தொடர் - கார்குழலி படித்தாள்

12. வினையெச்சத் தொடர் - புலவரே வருக

13. வினைமுற்றுத் தொடர் - பாடி முடித்தான்

14. எழுவாய்த் தொடர் - எழுதிய பாடல்

15. விளித் தொடர் - வென்றான் சோழன்



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

IV பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. 2 x 1 = 2

1. மல்லிகை குளத்தில் பூக்கும் மலர் அல்லை.
2. சித்தர்கள் செயற்கையை விரும்பியவர்கள் அல்லோம்.

V எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 2 X 3 = 6

1. பண்பு, அன்பு ஆகியவை பற்றிக் கலித்தொகை கூறுவன யாவை?
2. மக்கள் ஊரைவிட்டு வெளியேறக் காரணம் என்ன?
3. கலிங்க வீரர்கள் எவ்வாறு அஞ்சி ஓடினர்?
4. இருண்ட ஆட்சி என மீரா எதனைக் குறிப்பிடுகிறார்?
5. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களுள் நான்கினை எழுதுக.

VI ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி. 3 X 3 = 9

1. நமக்கு இருக்கும் பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறுவன யாவை?
2. மூங்கிலினால் செய்யப்படும் பொருள் குறித்து எழுதுக.
3. உழவுத் தொழில் குறித்து தகடூர் யாத்திரை கூறுவன யாவை?
4. தமிழ்நாட்டின் ‘ஹாலந்து’ என்று அழைக்கப்படும் ஊர் எது? ஏன்?
5. இந்தியத் தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

VII பின்வரும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 2 X 3 = 6

1. ‘அறிந்து’ என முடியும் குறளை எழுதுக.
2. ஆற்றுதல் ............. மறாமை வரை பாடறிந்து ஒழுகுதல் பாடல்.

VIII நெடுவினா. (ஒன்று மட்டும்) 6 X 1 = 6

1. தமிழக கைவினைக் கலைகள் பற்றிய செய்தியைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)***
2. அறிவு சால் ஔவையார் நாடகத்தை சிறுகதையாக சுருக்கி எழுதுக.

IX கட்டுரை எழுதுக. 6 X 1 = 6

1. நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு.
2. இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593